IN THE COURT OF SUBORDINATE JUDGE, ERANIEL.

O.S. No. 141/2023

Deposition of Witness for PW.4

Name : திருமதி. R.அனிஜா
Father Name :
Age :
Calling :
Village :
Taluk :
District :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 06.07.2026

சத்தியபிரமாணத்தின் பேரில் சாட்சியமளிக்கிறார்.

முதல் விசாரணை

நான் பஞ்சாப் நேசனல் வங்கியில் நாகர்கோயில் கிளையில் முதுநிலை மேலாளராக பணியாற்றுகிறேன். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது. அதன் அடிப்படையில் நான் மேரி ரெகுலரா தங்க நடார் என்பவரின் சேமிப்பு வங்கி கணக்கு விபரம் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.12. மேற்கூறிய நபரின் நகை கடன் வங்கி கணக்கு விபரம் அதாவது கணக்கு எண் 5854 ல் உள்ள வங்கி கணக்கு விபரம் வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கணக்கு எண் 95760 ல் உள்ள வங்கி கணக்கு விபரம் வா.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வங்கி கணக்கு எண் 5854 ல் உள்ள நகை பதிவேட்டின் நகல் வா.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.வங்கி கணக்கு எண் 95720 ல் உள்ள நகை பதிவேட்டின் நகல் வா.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காண்பிக்கப்படும் 20.09.2022 வங்கி கணக்கு விபரம் எங்கள் வங்கியால் கொடுக்கப்பட்டது என்றால், ஆமாம் அது வா.சா.ஆ.7 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்படுகிறது. எதற்காக வா.சா.ஆ.7 ல் Gold Loan என்று கையால் எழுதப்பட்டது என்றால் அப்பொழுது பணியில் இருந்த பணியாளர் புரிவதற்காக எழுதி உள்ளார், ஆனால் நான் தற்பொழுது வங்கி கணக்குவிபரம் தாக்கல் செய்திருக்கிறேன். 2 நகை கடன்களும் முடிக்கப்பட்டது. சேமிப்பு கணக்கு மட்டும் இருக்கிறது.

<u>குறுக்கு விசாரணை</u>

வா.சா.ஆ.7 ல் Gold Loan என்று எழுதப்படவில்லை என்றால் அதில் PF என்று குறிப்பிடப்பட்டுள்ளது நகை கடன் Scheme ஆகும். நகை கடனுக்கு PF அல்லது PA என்று குறிப்பிடுவோம். வா.த.சா.ஆ.7 ல் Gold Loan எழுதப்பட்ட இடத்தில் பணியாளர் கையெழுத்துப் போடவில்லை என்றால் ஆமாம். 20.09.2022 அன்று வாதியின் தயார் நகை அடமானம் எதுவும் என்றாலும் நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றாலும் இல்லை.

மறுவிசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.